<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

**2023**–ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் **28**–ஆம் தேதி திங்கட்கிழமை முற்பகல் **11.45** மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி<br>நாள் : 24.08.2023

தலைவர்,<br>நகர் மன்றம்.

<u>பொருள்கள்</u>

( 1 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலைய நுழைவுப் பகுதியின் முன்புறம், திராவிட முன்னேற்றக் கழகம், இராசிபுரம் நகரச் செயலாளர் திரு N.R. சங்கர் அவர்கள், தமிழ்நாடு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 22.00 மீட்டர் அகலம் மற்றும் 7.00 மீட்டர் உயரத்தில் நினைவு வளைவு கட்டுவதற்கு 24.07.2023–இல் கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்க்கண்ட நினைவு வளைவு கட்டுவதற்கு அனுமதி கோரியுள்ள இடம் நகரளவு ஆவணங்களில் சர்வே வார்டு–D, பிளாக்–8, நகரளவு எண். 1/2, 12, 13, 14, 15 மற்றும் 16 ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி என உள்ளது. மேற்க்கண்ட இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு கட்டுவதற்கு அனுமதி வழங்குவது சம்மந்தமாக மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். 221, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை, நாள் 20.11.1998–இன்படி புதிய பேருந்து நிலையத்தின் நுழைவுப் பகுதியின் முன்புறம் சர்வே வார்டு–D, பிளாக்–8, நகரளவு எண். 1/2, 12, 13, 14, 15 மற்றும் 16–இல் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு கட்டுவதற்கு போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சல் ஏதும் ஏற்படாமல் அமைப்பதற்கு மன்றம் அனுமதித்து அரசின் ஒப்புதல் பெறலாம்.

(71/23/எப்1)

**தீர்மானம் எண். 427**

அரசின் ஒப்புதலுக்கு மன்றம் அனுமதிக்கின்றது.

( 2 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்டப் பகுதியில் வரும் கழிவுநீர் சுத்திகரிக்க தற்போது பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் தட்டான்குட்டை சாலையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிலையம் தற்போது TWAD Board மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நிலையத்திலிருந்து வரும் நீர் முறையாக சுத்திகரிக்கப்பட்டு உள்ளதா என கண்காணிக்க OCEMS திட்டத்தின்கீழ் Flow Meter Supply செய்யப்பட்டுள்ளது. மேற்க்காணும் மீட்டர் பொருத்த ஆகும் உத்தேச செலவு ரூ. 1.35 இலட்சத்திற்கு நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொண்டமைக்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3307/23/இ2)**

**தீர்மானம் எண். 428**

மன்றம் அங்கீகரிக்கின்றது.

( 3 ) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள ஜெனரேட்டர் தற்பொழுது பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளது. மேலும் UPS-ம் பழுதடைந்துள்ளதால், அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் நகராட்சி நிருவாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர் அலுவலக காணொலி காட்சிகள் நடைபெறும்பொழுது மின் தடை ஏற்படுகிறது. மேற்படி, அத்தியாவசியப் பணிகளை கருத்திற்கொண்டு ஆணையாளர் அவர்கள் அறைக்கு மட்டும் UPS வைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 35800/—க்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொண்டமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்படி மின் தேவைகளை கருத்திற்கொண்டு நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3415/23/இ1)**

**தீர்மானம் எண். 429**

மன்றம் அங்கீகரிக்கின்றது.

( 4 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்துமிடம் மற்றும் பொதுமக்கள் நடைபாதைகளிலுள்ள மேற்கூரை (Roof Plastering) மிகவும் பழுதடைந்து, பொது மக்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலையிலுள்ளதால் மேற்க்காணும் பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(3668/23/இ1)**

**தீர்மானம் எண். 430**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 5 ) இராசிபுரம் நகராட்சி பழைய அலுவலக கட்டடம் கடந்த 1975—ஆம் ஆண்டு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்து கட்டடங்களின் சில பகுதிகளின் சுவர்கள் சேதமடைந்துள்ளதால் மேற்படி அலுவலகத்தின் முதல் மற்றும் தரைதளங்களை இடித்து அப்புறப்படுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(4671/22/இ1)**

**தீர்மானம் எண். 431**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 6 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 4–ற்குட்பட்ட வடக்கு காலனி பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் ஆழ்துளைக் கிணறுக்கான மின்மோட்டார் அறை மிகவும் பழுதடைந்துள்ளதால் இதனருகில் புதிய அறை கட்டப்பட்டுள்ளது. அந்த அறைக்கு மேற்படி இணைப்பை மாற்றியமைக்க தேவையான மின் பொருட்களின் விவரம் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | 3/20 காப்பர் ஒயர் | – | 1 காயில் |
| 2) | எர்த் ஒயர் | – | 3 கிலோ |
| 3) | 3டி ரீல் இன்சுலேட்டர் | – | 2 நெ. |
| 4) | 1" சர்வீஸ் பைப் (ஜி.ஐ.) | – | 10 அடி |
| 5) | 1" கிளாம்ப் மற்றும் 2" ஆணி | – | 10 எண்ணிக்கை |
| 6) | 32A 3D MCB | - | 1 எண்ணிக்கை |

மேற்க்காணும் மின் பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 5000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (2775/23/இ2)

**தீர்மானம் எண். 432**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 7 ) இராசிபுரம் நகராட்சி தட்டான்குட்டை சாலையிலுள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டம் (Bio mining) கட்டடத்தில் வள மீட்டு மையம் கட்டடம் கட்டப்பட்டு இதற்கான மெசினரி பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி மெசினரிக்கு மும்முனை இணைப்பு வழங்கி ஒயரிங் செய்ய தேவைப்படும் மின் பொருட்கள் கீழ் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | 3/20 காப்பர் ஒயர் | – | 3 காயில் |
| 2) | 1/10 காப்பர் ஒயர் | – | 1 காயில் |
| 3) | 63 A MCB | – | 1 நெ. |
| 4) | 1" PVC Pipe | – | 160 Ft. |
| 5) | கட்டு கம்பி | – | 2 Kg. |
| 6) | டேப்ரோல் | – | 5 நெ. |
| 7) | இதற்குரிய பலகை | | |

மேற்க்காணும் மின் பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 15000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(3622/23/இ2)

**தீர்மானம் எண். 433**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 8 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட 14 வார்டுகளில் நகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு தெரு விளக்கு பராமரிப்பு செய்யவும், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடம் ஆகியவற்றிலுள்ள விளக்குகள் பராமரிப்பு செய்ய கீழ்க்கண்டவாறு மின் பொருட்கள் தேவைப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 40 வாட்ஸ் குழல் விளக்கு | – | 50 எண்ணிக்கை |
| 2) | 40 வாட்ஸ் காப்பர் சோக்கு | – | 30 எண்ணிக்கை |
| 3) | 40 வாட்ஸ் ஸ்டாட்டர் | – | 50 எண்ணிக்கை |
| 4) | 36 வாட்ஸ் CFL பல்பு | – | 10 எண்ணிக்கை |
| 5) | 36 வாட்ஸ் CFL பல்பு சோக்கு | – | 25 எண்ணிக்கை |
| 6) | டியூப்லைட் சைடு ஹோல்டர் | – | 50 எண்ணிக்கை. |
| 7) | டேப் ரோல் | – | 20 எண்ணிக்கை |
| 8) | 50 வாட்ஸ் LED ஸ்ட்ரப் | – | 10 எண்ணிக்கை |
| 9) | 50 வாட்ஸ் LED டிரைவ் | – | 10 எண்ணிக்கை |

மேற்க்காணும் பொருட்கள் பெற உத்தேச செலவினத் தொகை ரூ. 50000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1207/19/இ2)

**தீர்மானம் எண். 434**

மன்றம் அனுமதிக்கின்றது.

**( 9 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட 14 வார்டுகளில் நகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு தெரு விளக்கு பராமரிப்பு செய்யவும், அலுவலகங்கள், வார்டு ஆபீஸ், அம்மா உணவகம், பொதுக்கழிப்பிடம் ஆகியவற்றிலுள்ள விளக்குகள் பராமரிப்பு செய்ய கீழ்க்கண்டவாறு மின் பொருட்கள் தேவைப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 40 வாட்ஸ் குழல் விளக்கு | – | 50 எண்ணிக்கை |
| 2) | 40 வாட்ஸ் சோக்கு | – | 30 எண்ணிக்கை |
| 3) | 36 வாட்ஸ் CFL பல்பு | – | 50 எண்ணிக்கை |
| 4) | 36 வாட்ஸ் சோக்கு | – | 50 எண்ணிக்கை |
| 5) | டியூப்லைட் சைடு ஹோல்டர் | – | 30 எண்ணிக்கை |
| 6) | டேப் ரோல் | – | 25 எண்ணிக்கை. |
| 7) | 1/18 காப்பர் ஒயர் | – | 2 காயில் |
| 8) | 32A MCB | – | 10 எண்ணிக்கை |

மேற்க்காணும் பொருட்கள் பெற ஏதுவாக உத்தேச செலவினத் தொகை ரூ. 30000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (1207/19/இ2)

**தீர்மானம் எண். 435**

மன்றம் அனுமதிக்கின்றது.

**( 10 )** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வந்த வாகனங்கள் TN 28 AX 1821, TN 28 AZ 0995, TN 28 S 1109, TN 28 AZ 2077, TN 28 Q 9138, TN 28 AZ 2073, TN 28 AZ 0992 ஆகியவற்றை கழிவு நீக்கம் செய்து தானியங்கி பொறியாளர் அனுமதித்துள்ளதால் இந்த வாகனங்களை பொது ஏலத்தில் விட மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(3308/20/எச்1)**

**தீர்மானம் எண். 436**

மன்றம் அனுமதிக்கின்றது.

**(11)** இராசிபுரம் நகராட்சி வருவாய் பிரிவில் **2023–2024–**ஆம் ஆண்டிற்கு சொத்துவரி, தொழில்வரி கேட்பு அறிவிப்பு நோட்டீஸ் 27 வார்டுகளுக்கு கணினியில் பதிவேற்றம் செய்து (Demand) எடுக்க விலைப்புள்ளி கோரலாம். அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. **50000/–** (ரூபாய் ஐம்பதாயிரம்) ஆகும் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விநியோகம் செய்தமைக்கும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(3877/23/அ1)**

**தீர்மானம் எண். 437**

அனுமதிக்கப்பட்டது

**(12)** இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள முதலமைச்சர் காலை உணவு திட்டத்தில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தின் முன் பகுதியில் சாய்வு தளம், SS steel-கைப்பிடி அமைத்தல், RO repair சரி செய்து, பைப் லைன் அமைத்து குடிநீர் வசதி செய்தல் மற்றும் பள்ளியின் கழிப்பறை மரமத்துப் பணி ஆகியவை செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ. **2.00** இலட்சத்திற்கு நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3568/23/இ1)**

**தீர்மானம் எண். 438**

அங்கீகரிக்கப்பட்டது

**(13)** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் கலைஞர் மகளீர் உரிமைத் தொகை திட்டத்தின்கீழ் முகாம் நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். **16133/23/**யுபிஏ நாள் **14.07.2023–**இல் **13** இடங்களில் முகாம் அமைக்க முடிவு செய்யப்பட்டு மேற்க்கண்ட இடங்களுக்கு Chair table, Water battle, சாமியானா பந்தல் அமைத்து பொது மக்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் இராசிபுரம் நகராட்சி துவங்கப்பட்டு **75–**ஆவது பவள விழாவை முன்னிட்டு அலுவலகத்தில் சிறப்பாக பந்தல், மைக் செட், சீரீயல் பல்பு அமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. **3.78** லட்சத்திற்கு நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொண்டமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(3415/23/இ1)

**தீர்மானம் எண். 439**

அனுமதிக்கப்பட்டது

( 14 ) நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8, வி. நகர் ரோடு எண். 18–இல் பிளாட் எண். 10, திரு சி. கோவிந்தசாமி, த/பெ. சின்னப்பய்யன் என்பவரது சொந்த இடத்தில் நகராட்சிக்குச் சொந்தமான சின்டெக்ஸ் டேங்க் உள்ளதால், மேற்படி டேங்கை அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(3936/23/இ2)

**தீர்மானம் எண். 440**

அனுமதிக்கப்பட்டது

( 15 ) இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண். 9–ஐ திருமதி ஆர். புவனேஸ்வரி என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். குத்தகைதாரர் தனது 26.07.2023–ந் தேதிய கடிதத்தில் கடையினை காலி செய்வதாகவும் நகராட்சி வசம் கடையினை ஒப்படைப்பு செய்வதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி கடைக்கு ஆகஸ்டு 2023 ஒரு மாதம் மட்டும் வாடகை செலுத்தப்பட வேண்டும். மேலும், வருவாய் ஆய்வாளர் குறிப்பில் மேற்படி கடை பழுதடைந்துள்ளதாக தெரிவித்தன்பேரிலும், குத்தகைதாரர் கடையினை வேண்டாமென தெரிவித்தன்பேரிலும் மேற்படி கடையின் குத்தகை உரிமைத்தை இரத்து செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை 31.08.2023 உடன் இரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/3618/23)

**தீர்மானம் எண். 441**

நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண். 9–இன் குத்தகை உரிமத்தை 31.08.2023 உடன் இரத்து செய்ய மன்றம் அனுமதிக்கின்றது.

( 16 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27–இல் உள்ள எரியாத தெரு விளக்குகளை சரிசெய்ய கீழ்க்காணும் மின் உபகரணங்கள் தேவைப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 40 வாட்ஸ் குழல் விளக்கு | – | 25 எண்ணிக்கை |
| 2) | 40 வாட்ஸ் காப்பர் சோக் | – | 20 எண்ணிக்கை |
| 3) | 40 வாட்ஸ் CFL சோக் | – | 20 எண்ணிக்கை |
| 4) | 40 வாட்ஸ் சைடு ஹோல்டர் | – | 30 எண்ணிக்கை |
| 5) | டேப் ரோல் | – | 5 எண்ணிக்கை. |
| 6) | 40 வாட்ஸ் ஸ்டாட்டர் | – | 25 எண்ணிக்கை |

மேற்படி மின் உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 9800/–ற்கு நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3933/23/இ2)**

**தீர்மானம் எண். 442**

அனுமதிக்கப்பட்டது

**(17)** இராசிபுரம் நகராட்சி 27–ஆவது வார்டுக்குட்பட்ட கோனேரிப்பட்டி காட்டுக்கொட்டாய் பகுதியில் கழிவுநீர் செல்லும் வாய்க்கால்களில் கழிவு மண் பெருமளவில் சேர்ந்துள்ளதால் வடிகால் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மற்றும் 19–ஆவது வார்டுக்குட்பட்ட காட்டூர் சாலையிலுள்ள இடுகாடு பகுதியில் கருவேலம் முள் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்துள்ளதால் மேற்படி இரு வார்டுகளிலும் JCP இயந்திரம் மற்றும் டிராக்டர் கொண்டு மண் அல்லவும், கருவேலம் மரங்களை வேரோடு பிடுங்கி அப்புறப்படுத்தவும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3926/23/இ2)**

**தீர்மானம் எண். 443**

அனுமதிக்கப்பட்டது

**(18)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளிலிருந்து வரும் திடக்கழிவுகளை எடுக்க 15–ஆவது நிதிக்குழு மான்யத்தில் 20–BOV-க்கள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி BOV–ஐ பாதுகாப்பாக நிறுத்தி வைக்க உரக்கிடங்கின் ஒரு பகுதியில் கூடாரம் அமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 3.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3890/23/இ1)**

**தீர்மானம் எண். 444**

அனுமதிக்கப்பட்டது

**(19)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் நீர் தேக்க தொட்டியில் Gas Chlorination Cylinder Refilling செய்தல் மதிப்பீடு ரூ. 1.20 இலட்சம் பணிக்கு 17.08.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| திருமதி சுமதி இன்பரா டெக், ஒப்பந்ததாரர் | – | 14.29 % மதிப்பீட்டை விட அதிகம் |
| திரு ஐ டெக், ஒப்பந்ததாரர் | – | 0.29 % மதிப்பீட்டை விட குறைவு |

மதிப்பீட்டைவிட குறைவான 0.29 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஐ டெக், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை வழங்கியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான 0.29 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஐ டெக், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(2436/23/இ2)

**தீர்மானம் எண். 445**

அனுமதிக்கப்பட்டது

(20) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வி. நகர் 1, 4 மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் குடிநீர் விநியோகம் செய்யும் பழுதடைந்த வால்வுகளை புதியதாக மாற்றுதல் மதிப்பீடு ரூ. 3.30 இலட்சம் பணிக்கு 17.08.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| அல்கம் இன்டஸ்ட்ரிஸ், மேட்டுப்பாளையம் | – | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு |
| ஸ்ரீ பவர் என்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் | – | 41.14 % மதிப்பீட்டை விட அதிகம் |

மதிப்பீட்டைவிட குறைவான 0.01 ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள அல்கம் இன்டஸ்ட்ரிஸ், மேட்டுப்பாளையம் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான 0.01 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள அல்கம் இன்டஸ்ட்ரிஸ், மேட்டுப்பாளையம் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1030/23/இ2)

**தீர்மானம் எண். 446**

அனுமதிக்கப்பட்டது

(21) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பாரதிதாசன் சாலை, நகராட்சி நடுநிலைப் பள்ளியில் தற்பொழுது பெயிண்ட் அடித்தல், காம்பவுண்ட் அமைத்தல் மற்றும் பள்ளிக்குத் தேவையான கணினிகள் மற்றும் UPS-கள் வாங்குதல் மதிப்பீடு ரூ. 9.40 இலட்சம் பணிக்கு 17.08.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரர் | – | 0.47 % மதிப்பீட்டை விட அதிகம் |
| திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர் | – | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு |

மதிப்பீட்டைவிட குறைவான 0.04 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான 0.04 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3178/23/இ1)

**தீர்மானம் எண். 447**

மன்றம் அனுமதிக்கின்றது

**( 22 )** இராசிபுரம் நகராட்சியில் **15, 17, 18, 20, 27** ஆகிய வார்டுகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்தல் மதிப்பீடு ரூ. **12.80** இலட்சம் பணிக்கு **17.08.2023**–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் – **0.09** % மதிப்பீட்டை விட குறைவு
திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர் – **0.18** % மதிப்பீட்டை விட அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான **0.09** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான **0.09** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2436/23/இ2)

**தீர்மானம் எண். 448**

மன்றம் அனுமதிக்கின்றது

**( 23 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **7**, வி நகர் ரோடு எண். **1** தெருவில் சிறு மின்விசை பம்பு பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் மதிப்பீடு ரூ. **1.50** இலட்சம் பணிக்கு **17.08.2023**–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரர் – **0.10** % மதிப்பீட்டை விட குறைவு
திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் – **22.41** % மதிப்பீட்டை விட அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான **0.10** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான **0.10** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2517/23/இ2)

**தீர்மானம் எண். 449**

அனுமதிக்கப்பட்டது

**( 24 )** இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் லாரி TN 28 BZ 9021 பழைய Water tank-ஐ நீக்கிவிட்டு புதிய Water tank அமைத்தல் மதிப்பீடு ரூ. **4.20** இலட்சம் பணிக்கு **17.08.2023**–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

லட்சுமி இண்டஸ்ட்ரிஸ், ஒப்பந்ததாரர் – **0.42** % மதிப்பீட்டை விட குறைவு
மணி மோட்டார்ஸ் அன்டு டிரேடர்ஸ், ஒப்பந்ததாரர்– 0.14% மதிப்பீட்டை விட குறைவு

மதிப்பீட்டைவிட குறைவான **0.42** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள லட்சுமி இண்டஸ்ட்ரிஸ், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை வழங்கியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான **0.42** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள லட்சுமி இண்டஸ்ட்ரிஸ், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(3179/23/இ2)**

**தீர்மானம் எண். 450**

அனுமதிக்கப்பட்டது

**(25)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் விநியோகக் குழாய்களில் புதியதாக மாற்றபட்ட வால்வுகளுக்கு தொட்டி கட்டுதல் பணி மதிப்பீடு ரூ. **3.80** இலட்சம் பணிக்கு **17.08.2023**–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

திரு என்.செல்லப்பன், ஒப்பந்ததாரர் – 1.52 % மதிப்பீட்டை விட அதிகம்
திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர் – 0.15 % மதிப்பீட்டை விட குறைவு

மதிப்பீட்டைவிட குறைவான **0.15** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான **0.15** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3179/23/இ2)**

**தீர்மானம் எண். 451**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.